

# ஸத் ஸம்ப்ரதாயம்

**विघ्नध्वान्तनिवारणैकतरणिः भक्तैकचिन्तामणिः**
**विद्याकाननगाहनै कसरणिः मच्चित्तभूषामणिः ।**
**भूयादेष कुतर्ककर्कशधियां हर्ता पहर्ता तथा**
**मोहानां सुधियां सदैव सविता कात्यायनीशात्मजः ॥ १५६॥**

விக்⁴னத்⁴வாந்தநிவாரணைகதரணி: ப⁴க்தைகசிந்தாமணி:
வித்³யாகானனகா³ஹனை கஸரணி: மச்சித்தபூ⁴ஷாமணி: |
பூ⁴யாதே³ஷ குதர்ககர்கஶதி⁴யாம்’ ஹர்தா பஹர்தா ததா²
மோஹானாம்’ ஸுதி⁴யாம்’ ஸதை³வ ஸவிதா காத்யாயனீஶாத்மஜ: ||156||

விக்கின இருளைப் போக்கும் சூர்யன், பக்தர்களின் ஒரே சிந்தாமணி, கல்விக்காட்டில் நுழைவதற்கான ஒரே பாதை, குதர்க்கம் செய்து வாதிப்பதால் அறிவு வரண்டவர்களை அகற்றுபவர், கலக்கத்தை நீக்குபவர், நல்லறிவு தருபவர், காத்யாயனிக்கும் சிவனுருக்கும் மைந்தன் இவர் என் சித்தத்தில் ஆபரணமாக விளங்கட்டும் (மீமாம்ஸாகௌஸ்துபம்)

## அருள் மொழிகள்

**சிரவணம், மனனம் மற்றும் நிதித்யாஸனம் ஆகியவற்றில் ஈடுபடுவதற்கு நான்கு தகுதிகள் தேவைப்படுகின்றன. அவை விவேகம் (பகுத்தறிதல்), வைராக்யம் (பற்றின்மை), ஸமாதி-ஷட்க-ஸம்பத்தி (மனவடக்கம் முதலிய ஆறு அருங்குணங்கள்) முமுக்ஷுத்வம் (ஸம்ஸாரத்திலிருந்து விடுபட வேண்டும் என்ற தீவிர ஆசை) என்பன.**

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த மஹா ஸ்வாமிகள்

## நீதிசதகம்

(மஹாகவி பர்த்ருஹரி)

उद्भासित अखिल खलस्य विशृङ्खलस्य प्रोद्गाढ विस्तृत निज अधम कर्मवृत्तेः ।
दैवात् अवाप्त विभवस्य गुणद्विषो अस्य नीचस्य गोचरगतैः सुखं आस्यते कैः ॥

உத்³பா⁴ஸித அகி²ல க²லஸ்ய விஶ்ரு’ங்க²லஸ்ய ப்ரோத்³கா³ட⁴ விஸ்த்ரு’த நிஜ அத⁴ம கர்மவ்ரு’த்தே: |
தை³வாத் அவாப்த விப⁴வஸ்ய கு³ணத்³விஷோ அஸ்ய நீசஸ்ய கோ³சரக³தை: ஸுக²ம்’ ஆஸ்யதே கை: ||

வெளிப்படையாக அறியக்கூடிய தீய குணங்களுடன் கூடி இழிச் செயல்களில் ஈடுபடுபவர்களும், தெய்வாதீனமாக ஊர்ஜிதமான குணசீலர்களை நிந்தனை செய்யும் தரங் கெட்டவரும் எப்படி ஸுகம் (இன்பம்) காணமுடியும்.

(துர்ஜன பத்ததி: (தீயோர் இயல்பு)

Nov 2022



## விதுர நீதி

एकः खादु न भुञ्जीत एकार्थान चिन्तयेत् ।
एको न गच्छेदध्वानं नैक सुप्तेषु जानुयात् ॥
ஏக꞉ கா²து³ ந பு⁴ஞ்ஜீத ஏகார்தா²ன சிந்தயேத் |
ஏகோ ந க³ச்சே²த³த்⁴வானம்' நைக ஸுப்தேஷு ஜானுயாத் ||



ருசியான வஸ்துவை ஒருவனாக சாப்பிடக் கூடாது. விஷயங்களை ஒருவனாக ஆலோசிக்கக் கூடாது. ஒருவனாக வழியில் நடக்கக்கூடாது. எல்லோரும் தூங்கும்போது ஒருவனாக விழித்துக் கொண்டிருக்கக் கூடாது. பலர் தூங்கும் போது ஒருவன் விழித்துக் கொண்டிருந்து யாருடைய பொருளாவது காணாமற் போனால் இவனையே சந்தேகிப்பார்கள்.எனக் கருத்து.

एकमेवाद्वितीयं तत् यद्राजन्नावबुद्धसे ।
सत्यं स्वर्गम्य सोपानं पारावारस्य नौरिव ॥
ஏகமேவாத்³விதீயம்' தத்
யத்³ராஜன்னாவபு³த்³த⁴ஸே |
ஸத்யம்' ஸ்வர்க³ம்ய ஸோபானம்'
பாராவாரஸ்ய நௌரிவ ||

அரசனான திருதராஷ்டிரன் நல்ல போகங்களையும் புண்ய லோகங்களையும் அடைய விரும்பி அது எதனால் கிடைக்குமெனக் கேழ்க்க விரும்பினான். அதற்கு விதுரர், ஓ அரசனே, நீர் எந்த பரமாத்மாவை அறியவில்லையோ, அது இரண்டற்ற ஒன்றாகவே உள்ளது. ஸத்யமாகவும் உள்ளது. அதுவே நல்ல போகங்களையும் புண்ய லோகங்களையும் அடைவதற்கு படிக்கட்டாக அமைந்து ஸமுத்திரத்தை தாண்டுவதற்கு கப்பலைப் போல் உள்ளது.

एकः क्षमावतां दोषः द्वितीयो नोपपद्यते ।
यदेनं क्षमया युक्तं अशक्तं मन्यते जनः ॥
ஏக꞉ க்ஷமாவதாம்' தோ³ஷ꞉ த்³விதீயோ நோபபத்³யதே |
யதே³னம்' க்ஷமயா யுக்தம்' அஶக்தம்' மன்யதே ஜன꞉ ||

பொறுமையுள்ளவர்களிடம் ஒரு தோஷத்தைத்தான் சொல்ல முடியும். பொறுமையுள்ள இவனை ஜனங்கள் சக்தி யில்லாதவனாக நினைக்கின்றார்கள் என்ற ஒரு தோஷம்தான். வேறு தோஷம் அவர்களுக்கு வர முடியாது. ஆனால் அது இவனுக்கு தோஷமல்ல. அந்த பொறுமையானது இவனுக்கு பெரிய பலமாகும். அதுவே அவனுக்கு சக்தியாகும்.

(தொடரும்.....)

Nov 2022



# ஆசார்யாளின் உபதேசங்கள்

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)

## ஸ்ரீ சாரதா பீடமும் ஆசார்ய பரம்பரையும்



(ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்)

ஹக்கனும் புக்கனுமே ஸ்ரீ வித்யாரண்ய சுவாமிகளைத் தேடி வந்தார்களேயன்றி சுவாமிகள் அவர்களைத் தேடிப் போகவில்லை. ஸ்ரீ வித்யாரண்யர் அவர்களை அனுக்ரஹித்தார். தம் அறிவாற்றலாலும் தபோ பலத்தாலும் அவர்களுக்கு கர்நாடக ஆதிபத்தியத்தைப் பெற்றுத் தந்தும் தாம் தபஸில் ஈடுபட்டு ஸந்யாசியாகவே இருந்தார். குருவின் அனுக்ரஹத்திற்கு கூறும் வகையிலும், அவர்கள் (ஹக்கனும் புக்கனும்) தங்கள் இராஜசின்னங்களை ஸ்ரீ வித்யாரண்யர் சரணாரவிந்தங்களில் சமர்ப்பணம் செய்தனர். குருவானவர் தம் சிஷ்யர்களின் மனம் புண்படும்படி நடந்துகொள்ளக் கூடாது என்ற ரீதியில் ஸ்ரீ வித்யாரண்ய சுவாமிகளும் அவர்களைத் திருப்திப்படுத்த நினைத்து அவர்கள் சமர்ப்பணம் செய்த இராஜமரியாதை சின்னங்களை ஏற்றுக் கொண்டார். அவற்றை அவர் விரும்பினார் என்றோ அவற்றை தேடிச் சென்றார் என்றோ கருதினால் அது தவறு. ஸ்ரீ வித்யாரண்யர் அடிச்சுவட்டை பக்தியுடன் பின்பற்றிவரும்



சிருங்கேரி ஆசார்யர்கள் ஒவ்வொருவரும் இந்த இராஜமரியாதை சின்னங்களை ஸ்ரீ வித்யாரண்யரைப் போல் ஏற்று வகித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஆகையால், இந்த பட்டாபிஷேக வைபவங்கள், ஆசார்யர்களால் விரும்பப்பட்டு செய்யப்படுகின்றன என்று யாராவது நினைத்தால் அது தவறு. ஆசார்யர்களுக்கு இதில் ஒன்றும் மோஹம் கிடையாது. ஸ்ரீ சங்கரபகவத்பாதரின் அத்வைத உபதேசங்களில் ஸதா ஈடுபட்டிருக்கும் ஆசார்யர்களுக்கு இவ்வித ஆசைகளை கற்பிப்பது மூடத்தனமாகும். சிஷ்யர்களை சந்தோஷப்படுத்துவது குருவின் கடமை என்பதினாலும், பாரம்பரியத்தை அனுசரிக்க வேண்டியும் இந்த பட்டாபிஷேக வைபவத்துக்கு இசைந்தோம். இதற்கு வேறு ஒரு நாடி காரணமும் இல்லை, எதிர்பார்ப்பும் இல்லை.



(ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்)

நம் குருநாதர் ஒன்றிலும் பற்றுதலில்லாமல் உண்மையான துறவியாகத் திகழ்ந்தார். நம் குறிக்கோளும் அதுவே. அதுவே விரும்பத்தக்கதாகவும் பின்பற்றத் தகுந்ததாகவும் இருக்க வேண்டும். அதே சமயம், குருவின் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதும், சிஷ்யர்களின் மனதைப் புண்படுத்தாமல் அவர்களுடைய அபீஷ்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற காரணமுமே நாம் இந்த இன்றைய வைபவங்களுக்கு இசைந்தது. எல்லோரும் குருவின் வழி நடந்து, அவர் விதித்த வழிகளைப் பின்பற்றி, ஸ்ரீ சாரதா பரமேச்வரியை வழிபட்டு அத்தேவியின் அருளைப் பெற வேண்டும் என்பதே நம் தீர்மானமான குறிக்கோள்.


ஹர நம: பார்வதீ பதயே | ஹர ஹர மஹாதேவ ||
ஜானகீகாந்தஸ்மரணம் | ஜய ஜய ராம ராம ||

(தொடரும்....)



# மேதா ஸூக்தம்

**(தைத்திரீய ஆரண்யகம், 4.10.41-44)**
**விளக்கம் மட்டும் இங்கு பார்க்கப்படும்**




5. உள்ளுணர்வைத் தருபவளும், நறுமணம்போல் எங்கும் பரவுபவளும், அனைத்தையும் சோதித்தறிய வல்லவளும், பொன்னிற எழுத்துக்களை உடையவளும், என்றென்றும் நிலைத்தவளும், உயர் உண்மைகளைத் தேடுபவர்கள் தொடர்ந்து நாடத் தக்கவளும், வலிமையின் இருப்பிடமானவளும், பால் முதலிய செல்வத்தால் என்னை வளர்ப்பவளுமான மேதா தேவி மலர்ந்த முகத்துடன் வந்து எனக்கு நன்மை செய்யட்டும்!

6. உள்ளுணர்வு, மக்கட் செல்வம், வேதங்களைப் படிப்பதால் வருகின்ற தேஜஸ் இவற்றை எனக்கு அக்கினி தேவன் தரட்டும். உள்ளுணர்வு, மக்கட் செல்வம், புலனடக்கத்தால் வருகின்ற வலிமை- இவற்றை எனக்கு இந்திரன் தரட்டும். உள்ளுணர்வு, மக்கட் செல்வம், எதிரிகளின் மனத்தில் பயத்தை உண்டாக்கு கின்ற வலிமை— இவற்றை எனக்கு சூரிய தேவன் தரட்டும்!

ஆன்மாவை அறிந்துகொள்வோம். அதற்காக பரம் பொருளை தியானிப்போம். அந்தப் பரம்பொருள் நம்மைத் தூண்டுவாராக!



## என்றும் புதியவர்
### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்
## 1. பகுத்தறிவு (விவேகம்)

**எது சரி, எது தவறு என்று பகுத்தறிவது விவேகம்**

முதலில், விவேகம் என்பதற்கு 'இது சரி, அது தவறு என்று பகுத்தறியும் திறன் என்று பொருள் கொண்டு, இக்குணம் ஆசார்யாளிடம் எப்படி அமைந்திருந்தது என்பதைப் பார்ப்போம். ஆசார்யாள் துறவறம் பெறுவதற்கு ஒரு நாள் முன்னர் நடந்த சம்பவம் இது:



"...ஆச்ரம வீகாரத்திற்கு முந்திய இரவும் இப்படி மற்றொரு நிகழ்ச்சி நடந்தது. இரவு வெகு நேரம் ஆகியும் ஒருவரும் தூங்கவில்லை. ஸ்வாமிகளாகப் போரும் ஸ்ரீனிவாஸன் தங்கியிருக்கும் அறையிலேயே எல்லோரும் கூடியிருந்தார்கள். அப்போது ஸ்ரீமடம் ஸர்வாதிகாரி ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் அங்கு வந்து, "சிஷ்ய ஸ்வாமிகளின் அறையில் இருப்பவர்கள் எல்லோரும் தயவு செய்து வெளியே வரவேண்டும். அவருக்கு முக்யமான வேலைகள் இருக்கின்றன. அதிகாலையில் அவர் எழுந்திருக்க வேண்டும்" என்றார். ஒரு வார்த்தை மட்டும் சேர்த்தார். 'நெருங்கிய உறவினர்கள் மாத்திரம் வேண்டுமென்றால் இன்னும் ஐந்து அல்லது பத்து நிமிஷம் தங்கியிருக்கலாம்' என்றார்.... எல்லோரும் அறையை விட்டு வெளியே வந்துவிட்டார்கள். ஐந்து ஆறு பேர்கள் மட்டும் உள்ளேயே உட்கார்ந்து இருந்தார்கள். ஏனெனில், 'நெருங்கிய உறவினர்கள்" என்ற கோஷ்டியில் அவர்கள் சேர்ந்து இருந்தார்கள். --- (அதில் ஒரு) உறவினர், ஸ்ரீனிவாஸா, நாளை முதல் இந்த மாதிரி ஸஹஜமாக உன்னிடம் பேச முடியாது. ஆகையால், என்னிடமும் இங்கு இருக்கும் உன் நெருங்கிய உறவினர்களிடமும் இதுவரை இருந்தது போல் ப்ரியமாகவே இருக்க வேண்டும்" என்றார்... நிதானமாகவும் தீர்மானமாகவும் (ஸ்ரீனிவாஸரின்)



பதில் வெளிவந்தது: 'உங்களைப் போல் பெரியவர்கள் இம்மாதிரி பேசுவது சரியல்ல..."




மறு நாள் துறவறம் பூணப்போகிறவர், சுற்றத்தவர்க்கும் மற்றவர்க்கும் வேறுபாடு காண்பது சரியல்ல, அது தவறு என்பதை நன்கு அறிந்திருந்தார். அது மட்டுமன்றி, இதில் நாம் இன்னொரு விஷயத் தையும் காணலாம். ஸந்யாஸ ஸ்வீகாரம் செய்யவுள்ளவர், பின்னாளில் ஒரு உயர்ந்த பீடத்தின் அதிபதியாகப் போகிறவர். ஒரு பெரிய நிறுவனத்தின் தலைவர் தம் உறவினர் என்பதற்காகச் சிலருக்குச் சலுகைகள் வழங்குவது அந்நிறுவனத்தின் செயல்பாட்டிற்கு ஊறே விளைவிக்கும். இவ்வுண்மையை ஆசார்யாள் அச்சிறு வயதிலேயே அறிந்திருந்தார் என்பதையும் இந்நிகழ்வு காட்டுகிறது. பிற்காலத்தில் ஆசார்யாள் பீடாதிபதியாக இருந்த போது இந்த விஷயத்தில் அவருடைய நிலைப்பாடு எப்படி இருந்தது என்பதை இரு நிகழ்வுகளின் வாயிலாகப் பார்ப்போம்.

"...ஒரு சமயம், மடத்திலிருந்து ஏதோ ஒரு சலுகையைப் பெற விரும்பிய ஒருவர் ஆசார்யாளின் இளைய சகோதார் ராமநாத சாஸ்திரியை அணுகித், தமக்குச் சாதகமாக ஆசார்யாளிடம் பரிந்துரை செய்யுமாறு வேண்டினார். இந்த விஷயத்தில் ஆசார்யாளின் நிலைப்பாட்டை நன்கு அறிந்திருந்த ராமநாத சாஸ்திரி வந்தவரிடம், "என்னிடமிருந்து பரிந்துரை பெறுவதினால் உங்களுக்கு எதுவும் ஆகப் போவதில்லை. வேண்டுமானால், ஆசார்யாளை நீங்கள் இது விஷயமாகப் பார்க்கச் செல்லும் போது நான் உடன்வருகிறேன். உங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால், ஆசார்யாள் நீங்கள் விரும்புவதைச் செய்வார்; இல்லையாயின், அது நடக்காது' என்று கூறினார் ..."

"...ராமநாத சாஸ்திரிகளுக்கு ஒரு சமயம் பணக் கஷ்டம் ஏற்பட்டது. அப்போது, ஆசார்யாளின் பால்ய நண்பர் நாகேஸ்வர சாஸ்திரி ஆசார்யாளை அணுகி, ராமநாத சாஸ்திரிகளுக்கு விசேஷமாக உதவுமாறு வேண்டினார். அதற்கு ஆசார்யாள், 'இந்த மடத்தில் இருப்பது எதுவுமே என்னுடையதல்ல. அவை யாவும் சாரதாம்பாளுக்கே சொந்தம். ராமநாதன் எனது பூர்வாசிரமத் தம்பி என்பதற்காக நான் அவனுக்கு விசேஷமாக உதவ முடியாது. என்னால் செய்ய முடிந்தது பாரபட்சமின்றி இருப்பது மட்டுமே' என்றார்.."

(தொடரும் ...) மிக்க நன்றி : Centre for Brahmavidya



# நீதி மஞ்ஜரீ

## ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்தியாயம் 1
### நல் வாழ்க்கை

"யாரையாவது நல்லவராக அழைத்துக்கொண்டு வரவேண்டும்" என்று யுதிஷ்டிரரிடமும் துரியோதனனிடமும் சொன்னபோது இருவரும் தேடப்போனார்கள். யுதிஷ்டிரர் திரும்பி வந்து "எல்லாருமே நல்லவர்களாக இருக்கிறார்களே. யாரை அழைத்து வருவதென்று தெரியவில்லை" என்று சொல்லி விட்டார். துரியோதனனும் திரும்பிவந்து "எல்லோருமே துஷ்டர்களாய் இருக்கிறார்களே, அழைத்துவருவதற்கு யாரையும் காணவில்லையே" என்று சொன்னான். இவ்விருவருக்கும் நல்ல மனுஷியராக அழைத்துவர முடியவில்லை என்பது பொதுவாயிருந்தபோதிலும், அவர்கள் சொல்லும் காரணங்களிலிருந்து அவர்களுடைய ஸ்வபாவ குணங்களே வெளிப்பட்டனவென்றுதான் தீர்மானம் சொல்ல வேண்டும். இதிலிருந்தும் நம் மனோபாவனைதான் வெளியில் பிரதிபலிக்கிறதென்பது நன்றாகத் தெரியவருகிறது. நாம் கண்ணில் பச்சைக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு அதை மறந்து, பார்ப்பதெல்லாம் பச்சையாக இருக்கிறதென்று நினைப்பது போலாகும்.



Jagadguru Sri Abhinava Vidyatirtha Mahaswamigal and Jagadguru Sri Bharati Tirtha Mahaswamigal with Sri Jnanananda Bharati (purvashrama name : Sri Krishna Swami Aiyar) who was an ardent follower of Sringeri Mutt. He wrote many articles, experiences and life history of Jagadguru Sri Chandrashekhara Bharati Mahaswamigal, without which we would not have known much of this great Jivanmukta.
- Posted by N Jambunathan Iyer, Chennai Tamil Nadu India

இவ்விதமாக ஸுகிகளிடத்தில் மைத்ரீயையும் துக்கிகளிடத்தில் கருணையையும் நாம் ஏற்படுத்திக் கொண்டோமேயானால் மனம் சாந்த நிலையிலிருக்குமென்று ஏற்பட்டது. இதேமாதிரி புண்ணியம் செய்கிறவர்களிடமும் பாபம் செய்கிறவர்களிடமும் நமக்கு இருக்கவேண்டிய மனோபாவத்தையும் கொஞ்சம் கவனிப்போம். யாரேனும் ஒருவர் ஒரு நல்ல காரியம் செய்தால், ஸாமான்ய மனிதர்களுக்கு உடனே அதில் தோஷம் கண்டுபிடிக்கவே தோன்றுகிறது. "அவனுக்கு சிரத்தையே கிடையாது. வெறும் வேஷம் போடுகிறான். வெறும் டம்பம். நாலு பேர் தன்னை சிலாகிக்க வேண்டுமென்று செய்கிறான். நல்ல கார்யமென்று ஆரம்பித்து ஊரில் பணம் வசூலித்து எடுத்துக்கொள்வதற்காக இந்த பிரவிருத்தி. அவனுக்கு படிப்பும் கிடையாது. செய்ய வேண்டிய முறையும் தெரியாது.இப்படியேதான் ஏமாற்றி வருகிறான்" என்றெல்லாம் சொல்லத்தோன்றும். இவ்விதத் தோற்றங்களுக்கு இடம் கொடுக்காமல் "நம்மால் நல்ல கார்யம் செய்ய முடியவில்லை, அவனாவது செய்கிறானே" என்று ஸந்தோஷப்பட வேண்டும். அவனுக்குத் தன்னால் இயன்ற மட்டும் ஸஹாயம் செய்தால் மிகவும் சிலாக்கியம். அதற்கு ஸௌகர்யமோ இஷ்டமோ இல்லாவிட்டாலும் தூஷிக்காமலாவது



இருக்கலாம். நாம் தூஷிப்பதினால் அந்தக் கார்யம் நின்று போகப் போகிறதில்லை. தூஷிப்பதின் பிரயோஜனம் நாம் உட்கார்ந்த இடத்திலிருந்தே பாபம் ஸம்பாதிப்பதைத் தவிர வேறு எதுவும் கிடையாது. அவ்விதம் செய்யாமல் அந்தக் கார்யம் நடப்பதில் ஸந்தோஷத்தை அடைந்து சிலாகிப்போமேயானால், இருந்த இடத்திலேயே கொஞ்சம் புண்ணியத்தை நாமும் ஸம்பாதித்துக் கொள்ளலாம். ஆனால் பிறர் செய்யும் “நல்ல கார்யம்” என்பது சாஸ்திர விரோதமாயிருக்கிறதாவென்பதை கவனித்துத்தான் சிலாகிக்க வேண்டும். சாஸ்திர விரோதமான அனேக கார்யங்கள் இக்காலத்தில் "நல்ல கார்யங்கள்” என்று வெகுவாகப் பிரசாரம் செய்து வருவதால் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சாஸ்திர விரோதமான கார்யங்களை "நல்ல கார்யங்கள்" என்று நினைத்துக்கொண்டு ஈடுபட்டாலும் சிலாகித்தாலும் பாபம்தான் ஏற்படும். வாஸ்தவமாகவே நல்லகார்யங்களாயிருப்பதில் நமக்கு ஸந்தோஷம் ஏற்பட்டால், நாமும் அதைப் போல நல்ல கார்யங்களைச் செய்ய வேண்டுமென்ற ஊக்கம் ஏற்படும். அதன் மூலமாய் நாமும் நல்ல கார்யங்களைச் செய்வதில் ஈடுபட்டு நாமும் புண்ணியசாலிகளாக ஆகிவிடுவோம். ஆகையால் மற்றவர்கள் செய்துவரும் புண்ணிய கர்மாக்களைப் பார்த்து நமக்கு மனதில் ஸந்தோஷமும் "நல்ல கார்யம்" என்று அனுமோதனமும் ஏற்படவேண்டியது மிகவும் அவசியம்.

வேறு யாரேனும் ஒரு கெட்டகார்யத்தைச் செய்தால் அதில் ஸந்தோஷமோ, அனுமோதனமோ ஏற்பட்டுவிட்டால் அதுவே பாபத்திற்கு ஹேதுவாகிவிடும். அதைத் தடுப்பதற்கு சக்தியிருந்தால் தடுக்கலாம். அக்கார்யத்தைச் செய்வது புத்திரன், பார்யை, சிஷ்யன், ஸ்நேஹிதர், முதலானவர்களாய் நம் சொல்வறுதிக்குக் கட்டுப்பட்டவர்களாயிருக்கும் பக்ஷத்தில் "தடுக்கலாம்' என்று மாத்திரமில்லை என்று தடுக்கவேண்டியது நம் கடமையேவாகும். தடுக்காமலிருந்தால் பாபமே ஏற்படும். ஆனால் தடுத்தும் அவர்கள் நம் சொல்லை மீறிச் செய்வார்களேயானால் அந்தப் பாபம் அவர்களுடன் நின்றுவிடும். சொன்னால் அவர்கள் கேட்க மாட்டார்களென்று சொல்லிக் கொண்டோ. நாம் சொல்லி அவர்கள் கேட்காது போனால் நமக்கு கௌரவக் குறைவு என்று எண்ணிக்கொண்டோ, சொல்லாமலேயிருந்து விடுவது தோஷமேயாகும். தன் சொல்லுக்கு உள்படவேண்டியவர்களைத் தவிர வேறு யாரேனும் பாபச் செயலில் ஈடுபட்டிருந்தால் தனக்கு சக்தியிருந்தால் மாத்திரம் தடுக்கலாம். சக்தியில்லையானால் உதாஸீனமாய் ஒதுங்கிப் போகவேண்டியதுதான் அவர்களைத் தடுக்க சக்தியில்லாத போது அவர்களை நிந்திப்பது உசிதமில்லை. நிந்தித்தால் அவர்களுடைய துவேஷத்தை ஸம்பாதித்துக்கொள்வதைத் தவிர எவ்வித பிரயோஜனமும் கிடையாது. அவர்கள் அந்த துவேஷத்தை நம்மிடமே காட்டவாரம்பித்து விடுவார்கள்.

(தொடரும் ...) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி



# श्री शारदास्तोत्राणि

## ஸ்ரீ ஶாரதா³ஸ்தோத்ராணி

**(ஸ்ரீ சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகர பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)**

### श्री शारदागीतम् - 2

**ஸ்ரீசாரதா கீதம் - 2**

भगवति भवसोदरि मे भद्रं कुरु वाण्याशु ।
करविधृतामृत कलशे नम्र मर्त्य पालनाय ।।
ப⁴க³வதி ப⁴வஸோத³ரி மே ப⁴த்³ரம்' குரு வாண்யாஶு |



கரவித்⁴ரு'தாம்ரு'த கலஶே நம்ர மர்த்ய பாலனாய ||

வணங்கி நிற்கிற மக்களைக் காக்க கையில் அமுத கலசம் கொண்டவளே ! பகவதி ! சிவபெருமானது உடன் பிறந்தவளே ! வாணி ! எனக்கு நலம் தருவாய் !

मुखविधृतामृत किरणे योगिवर्यलभ्यरूपे ।
विधिहर विष्णिवन्द्रमुखैः पूज्यमानपादकञ्जे ॥
முக²வித்⁴ரு'தாம்ரு'த கிரணே யோகி³வர்யலப்⁴யரூபே |
விதி⁴ஹர விஷ்ண்விந்த்³ரமுகை²: பூஜ்யமானபாத³கஞ்ஜே ||

பிரும்மா ஹரன் விஷ்ணு (ருத்திரன்) இந்த்ரன் முதலானவரால் சரணகமலங்களில் வணங்கப் பெறுபவளே! வாணி ! எனக்கு நலம் தருவாய் .



# ஸ்ரீமத் வால்மீகி ராமாயண மாஹாத்ம்யம்

## (வால்மீகி ராமாயணத்தின் சிறப்பு)

**(ஸ்ரீ ஸ்கந்தபுராணம் உத்தரகண்டத்தில் நாரதர்-ஸநத்குமாரரிடையே நடந்த உரையாடல்)**

### அத்தியாயம் : மூன்று
### மாக மாதத்தில் இராமாயணத்தைக் கேட்பதன் பலன்; மன்னன் சுமதி-சத்தியவதியின் முற்பிறவி வரலாறு



சனத்குமாரர் கேட்கிறார்- தேவரிஷி நாரதரே! இந்த இதிகாசமானது தங்களால் கூறப்பட்டது. இராமாயணத்தின் பெருமைகளை, இன்னும் விரிவாக மீண்டும் எடுத்துக் கூறுங்கள்.

(கார்த்திகை மாதத்தில் இராமாயணத்தைப் படிப்பதாலும் கேட்பதாலும் ஏற்படும் நற்பயன்களை எடுத்துக் கூறினீர்கள்.) தாங்கள் மனமுவந்து, மற்ற மாதங்களில் இராமாயணத்தைப் படிப்பதாலும் கேட்பதாலும்) ஏற்படும் மகிமைகளைக் கூறுங்கள். முனிவரே தங்கள் சொற்களாகிற அமுதத்தைப் பருகும் யாருக்குத்தான் பேரானந்தம் உண்டாகாது?

நாரதர் கூறுகிறார்- இராமனுடைய மகிமைகளை அறிந்து கொள்வதற்கு மிகவும் ஆர்வத்துடன் இருக்கிறீர்கள் என்பதால், நீங்கள் எல்லோரும் பெரும் பாக்கியசாலிகள்; கடமைகளைச் செய்து முடித்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை.பிரும்மத்தை அறிந்த முனிவர்கள், மிகவும் புண்ணியம் செய்தவர்களுக்கும்கூட, இராகவனுடைய பெருமையைக் கேட்பது என்ற விஷயம் எளிதில் பெறக் கூடியதல்ல என்று சொல்லியிருக்கிறார்கள். மாமுனிவர்களே! மிகவும் பழமையானதும் பல்சுவை கொண்டதுமான இராமாயணம் என்ற இதிகாசத்தைக் கேளுங்கள். அது, எல்லாப் பாவங்களையும் போக்கக் கூடியது; எல்லா பாவங்களையும் போக்கக்கூடியது; எல்லா நோய்களையும் அழிக்கக் கூடியது.

முன்னர், துவாபர யுகத்தில், சந்திர வம்சத்தில் தோன்றிய சுமதி என்ற மன்னர், ஏழு த்வீபங்களுக்கும் ஒப்பற்ற பேரரசராக செல்வச் செழிப்புடன் இருந்து வந்தார். அவர் அறநெறி தவறாதவர்; வாய்மை தவறாதவர்; எல்லாவித நற்குணங்களும் வாழ்க்கைச் செல்வங்களும் நிறைந்தவர்;



எப்போதும் இராமகாதையைக் கேட்பவர்; இராமனை வழிபடுவதில் ஊக்கங்கொண்டவர். இராம வழிபாட்டில் ஆழ்ந்திருக்கும் அடியார்களுக்குப் பணிபுரிவதில் பெருவிருப்பம் உடையவர்; அகங்காரம் இல்லாதவர்; மரியாதைக்குரிய சான்றோர்களிடத்தில் பெருமதிப்புக் கொண்டிருப்பவர்; எல்லாவற்றையும் சமமாகப் பார்ப்பவர்; நல்ல பண்பாளர்.

மன்னராகிய சுமதி, எல்லாப் பிராணிகளின் நலனிலும் அக்கறையுடையவர்; அமைதியாக இருப்பவர்; நன்றி மறவாதவர்; புகழ் பெற்றவர். பெரும்பேறு பெற்ற அவருடைய மனைவி, எல்லா சுபலட்சணங்களும் அமையப் பெற்றவள். கணவரிடத்தில் தன் உயிரையே வைத்திருந்த கற்புக்கரசியான அவள் பெயர், சத்தியவதி. கணவன்-மனைவியான அவ்விருவரும் இராமாயணத்தைப் படிப்பதிலும் கேட்பதிலும் எப்போதும் ஈடுபட்டு வந்தார்கள்.

நாள்தோறும் அன்னதானம் செய்து வந்தார்கள்; தண்ணீர் தானம் செய்தார்கள் அதாவது தண்ணீர்ப் பந்தல் அமைத்தார்கள். பெரிய நீர்நிலைகள், பூஞ்சோலைகள், கிணறுகள் அமைத்துக் கொடுத்தார்கள். பெரும் பாக்கியசாலியான அந்த மன்னர். இராமாயணத்தில் ஆழ்ந்து தோய்ந்தவராக இருந்து வந்தார். உள்ளத்தில் பக்தியுணர்வு நிறைந்து விளங்க, இராமாயண காவியத்தைத் தானே பாராயணம் செய்வார்; அல்லது, பிறர் சொல்லக் கேட்பார். அறத்தின் முற்றறிவுடைய, எப்போதும் இராமனிடம் திளைத்த மன்னரையும், அவருடைய மனைவி சத்தியவதியையும் தேவர்கள்கூடப் போற்றிப் பாராட்டினார்கள்.

மூன்றுலகங்களிலும் புகழ் பெற்றவர்களும் அறவொழுக்கம் தவறாதவர்களுமான அந்தத் தம்பதியைக் காண்பதற்கு, ஒரு சமயம், ஏராளமான சிஷ்யர்களை அழைத்துக் கொண்டு விபாண்டக முனிவர் வந்தார். விபாண்டகர் வந்து கொண்டிருப்பதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்த மன்னர், உபசாரங்களுக்குரிய பல பொருள்களை எடுத்துக் கொண்டு. மனைவி உடன்வர, அவரை எதிர்கொண்டழைக்கச் சென்றார். அதிதி உபசாரங்களைப் பெற்றுக் கொண்டு, மனப்பூரிப்புடன் இருக்கையில் அமர்ந்துகொண்ட அவரை நோக்கி, தன் இருக்கையில் உட்கார்ந்து கொண்டு. இரு கைகளையும் கூப்பியவண்ணம் மன்னர் கூறினார்.

(தொடரும் .....)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்